**OPEN ACCESS**

Manuscript ID: TAM-070320236095

Volume: 7

Issue: 3

Month: January

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 31.10.2022

Accepted: 03.12.2022

Published: 01.01.2023

Citation:
Sana Anjum, MJF, et al. "Developing English Proficiency through Online Webinars during COVID-19: An Analysis Based on South Eastern University of Sri Lanka." *Shanlax International Journal of Tamil Research,* vol. 7, no. 3, 2023, pp. 111–21.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i3.6095

*Corresponding Author:
zunoomy@seu.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Developing English proficiency through Online Webinars during COVID-19: An Analysis based on South Eastern University of Sri Lanka

**M.J.F. Sana Anjum[1], M.M.F. Nuseedha[2], M.M.F. Akeela[3]**
*Department of Arabic Language*
*South Eastern University of Sri Lanka, Sri Lanka*

**M.S. Zunoomy**
*Department of Arabic Language*
*South Eastern University of Sri Lanka, Sri Lanka*
*https://orcid.org/0000-0001-8382-2189*

**M.F.F. Shafna**
*Department of Islamic Studies*
*South Eastern University of Sri Lanka, Sri Lanka*

**Abstract**
Many people desire to learn English effectively, because of the globally influential language. Especially, the undergraduates are very keen in developing their English language skill. They Develop it through additional classes, certificate and diploma courses. During the pandemic situation in Srilanka, They could participate online webinars at home due to online learning process. Thus, the objective of this research is to identify whether they were able to improve their English proficiency. For that, the research uses descriptive methodology . The primary data were gathered by structured questionnaire to 75 undergraduates of third year of the south eastern university of sri lanka. At the same time the, Secondary data were gathered from books, research articles, and website. The data obtained were analyzed by Ms excel. This research finds that the undergraduates were able to get pros in Education, to participate number of webinars, to complete English courses, to improve their English proficiency during COVID-19. In particular this research declared that there were as many pros in Education as there were cons during the pandemic.

**Key Words:** COVID-19, Online Learning, English Proficiency, Online Courses

**References**

1. Abdullah, M.M.A.; Sharmina, A.M.F.; Suhaima, M.R.J.; Mazahir, S.M.M. (2021). University Students' Satisfaction with Teaching Activities Carried out through the Online Learning Process: A Study Based on Department of Islamic Studies of the South Eastern University of Sri Lanka. Proceedings - 9th South Eastern University International Arts Research Symposium, Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka. Fathima Farasa, S.M. (2016). The decrease of results in English Language of General Certificate of Education (Ordinary Level) students: A study based on certain schools in Sammanthurai Educational Division. South Eastern University Arts Research Session.

2. Jesuiya, D.; Priyadarshani, H.D.C. (2020). Impact on Online Teaching Learning Process during COVID-19: with Reference to Faculty of Education, The Open University of Sri Lanka. 7th International Symposium 2020, FIA, SEUSL.
3. Mohalik, Ramakanta; Poddar, Srimoyee. (2020). Effectiveness of Webinars and Online Workshops during the COVID-19 Pandemic. SSRN Electronic Journal, DOI: 10.2139/ssrn.3691590.
4. Nafrees, A.C.M., Roshan, A.M.F., Nuzla Baanu, A.S., Fathima Nihma, M.N., and Shibly, F.H.A. (2020). Awareness of Online Learning of Undergraduates during COVID 19 with special reference to South Eastern University of Sri Lanka. Journal of Physics: Conference Series, 1712 (2020) 012010, doi:10.1088/1742-6596/1712/1/012010.
5. Nafrees, ACM.; Roshan, AMF.; Nuzla Banu, AS.; Shibly, FHA.; Marry, R.; Ahamed Rifai Kariapper, RK. (2020). An Investigation of Sri Lankan university undergraduates perception About Online Learning During Covid - 19 with superior References To South Eastern University. Solid State Technology, 63(6). P.8829-8840.

# COVID –19 காலப்பகுதியில் Online Webinars மூலமாக ஆங்கில மொழித் திறனை விருத்தி செய்தல்: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஓர் பகுப்பாய்வு

M.J.E. *சனா அஞ்ஜீம்,* M.M.F. *நுஸீதாா,* M.M.F. *அக்லா,* M.S. *சுனூமி*
அரபி மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

M.F.F. *ச ஃபானா*
இஸ்லாமிய மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***

*ஆங்கில மொழி உலகளாவிய ரீதியில் செல்வாக்கு செலுத்துவதனால் அதனை அனைவரும் வினைத் திறனாக கற்றுக்கொள்ள ஆர்வங்கொள்கின்றனர். அதிலும் குறிப்பாக, பல்கலைக்கழக மாணவர்கள் தமது ஆங்கில மொழி அறிவை விருத்திசெய்து கொள்வதில் மிகக் கரிசனையாக உள்ளனர். மேலதிக வகுப்புக்கள், மாதாந்த அல்லது வருடாந்த கற்கைநெறிகள், ஆங்கில டிப்ளோமா பாடநெறிகள் என பல்வேறு கற்கைநெறிகள் மூலம் அவர்களின் ஆங்கில அறிவை விருத்திசெய்துகொள்கின்றனர். அந்தவகையில் கொவிட்–19 காலப்பகுதியில் மாணவர்களின் கல்வி நிகழ்நிலையில் இடம்பெறுகின்ற நிலை ஏற்பட்டதால் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வீட்டிலிருந்தவாறே பல செயலமர்வுகளில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் கிடைத்தன. அதன்மூலம் தமது ஆங்கில அறிவை மேம்படுத்திக்கொள்ள முடியுமாக இருந்ததா என்பதை அடையாளப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும். அதனை கண்டறிவதற்காக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக அறபு மொழித் துறையில் கற்கும் மூன்றாம் வருட மாணவர்களில் எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட 75 மாணவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இந்த வகையில், இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி அளவுசார் "ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு விவரிப்பு முறையியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதல் நிலைத்தரவுகள் வினாக்கொத்து மூலமும் இரண்டாம் நிலைத்தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள், இணையத்தளங்கள், ஆய்வுக்கட்டுரைகள் மூலமும் பெறப்பட்டுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தரவுகள் எம்.எஸ். எக்ஸல் மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. அதனடிப்படையில் கொவிட்–19 காலப்பகுதியில் கல்வி ரீதியான பல சாதக விளைவுகளை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்கள் பெற்றிருப்பதையும், அவர்கள் அதிகமான செயலமர்வுகளில் கலந்துகொண்டதையும், உள்நாட்டு ரீதியான ஆங்கில கற்கைநெறிகளை பூர்த்திசெய்திருப்பதையும், அதன் மூலம் மொழியறிவை வளர்க்க முடியுமாக இருந்ததையும் இவ்ஆய்வு கண்டறிந்துள்ளது. குறிப்பாக, கொவிட்–19 காலப்பகுதியில் பாதகங்கள் இருப்பது போல கல்வித் துறையில் பல சாதகங்கள் இருப்பதும் இவ்ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *கொவிட்–19, நிகழ்நிலைக் கற்றல், ஆங்கில மொழி, நிகழ்நிலை கற்கைநெறிகள்*

## ஆய்வு அறிமுகம்

மொழி ஒரு தொடர்பாடல் கருவி, ஒருவருடைய எண்ணத்தையும் சிந்தனையையும், கருத்துக்களையும் இன்னொருவருக்கு உணர்த்துவதற்கு மொழி மிகச் சிறந்த பரிமாற்ற ஊடகமாக தொழிற்படுகின்றது (அஷ்ரப், 2012). ஆங்கில மொழியானது இன்று சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்டதொரு மொழியாக விளங்குகின்றது. இவ் ஆங்கில மொழிக் கல்வியும்கூட உலகலாவிய ரீதியில் மிகவும் அவசியமானதாகவே நோக்கப்படுகின்றது (Farasa 2016). இன்றைய உலகில் எங்கு சென்றாலும் ஆங்கில மொழியை மாத்திரம் அறிந்திருந்தால் போதும் என்ற நிலையை காணக்கூடியதாக உள்ளது. நவீன காலத்தில் ஆங்கிலக் கல்வியின் இன்றியமையாமை மிக ஆழமாக உணரப்படுகின்றது. இன்று சர்வதேச மொழியாக மதிக்கப்படும் ஆங்கில மொழியின் செல்வாக்கு கல்வி நிர்வாக சேவைகளில் பாரியளவு செல்வாக்கு செலுத்துகின்றது. நாம் விரும்பியோ விரும்பாமலோ ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. எமது நாட்டில் ஆங்கில மொழியை கற்றுக்கொள்வதற்கு பல்வேறுபட்ட வாய்ப்புக்கள் இருக்கிறன. அவை தனியார், அரசாங்க நிறுவனங்களில் மட்டுமன்றி இலகு வழி புத்தகங்களைக் கற்றுக்கொள்வது மூலம் என ஏராளமான வசதிவாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

2019ஆம் ஆண்டில் முழு உலகையும் ஆட்கொண்ட கொரோனா வைரஸ் தாக்கத்தினால் மனிதனின் பல்வேறு அன்றாட செயற்பாடுகளில் மாற்றங்களைக் கடைபிடிக்க நேரிட்டது (Hewamanne 2021). அதிலும் குறிப்பாக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளும் சில தொழிலாளர்களின் தொழில் முயற்சிகளும் நிகழ்நிலையிலே தொடர்ந்தன. அதன் பிரகாரம் நேரடியாகக் கல்வியைப் பெற்ற காலம் சென்று தற்போது காலச்சூழ்நிலைகளுக்கு ஏற்றாற் போல் அனைத்துமே நிகழ்நிலைக் கல்வியாகக் மாறிவிட்டன. பாலர் பாடசாலை முதல் கலாநிதி பட்டம் பயிலும் அனைவரும் இன்று வீட்டில் இருந்தவாறே தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். கோவிட்-19 ஏற்பட முன் குறிப்பிட்ட கல்வி நிலையத்திற்குச் சென்று குறித்த நேரத்தில் பணம் செலுத்தி, உள்நாட்டு வளவாளர்களை மாத்திரமே சந்தித்து கல்வியைப் பெறக்கூடிய வழமை இருந்தது. இன்று நிகழ்நிலையில் உலகில் எப்பாகத்தில் இருந்தாலும் கூட பிரசித்தி பெற்ற வளவாளர்களுடனான கலந்துரையாடல்களை மேற்கொள்ள முடியுமாக இருக்கின்றது. அதிகமான நிகழ்வுகள், கலந்துரையாடல்கள், மாநாடுகள் ஆங்கில மொழியில் நிகழ்நிலையின் ஊடாக நடைபெற்று வருகின்றமையை அவதானிக்க முடியுமாக இருக்கின்றது. சர்வதேச மொழியான ஆங்கில மொழியின் அடிப்படை இலக்கண அறிவை வகுப்பறைகளில் பயின்ற எமக்கு இன்று நிகழ்நிலையின் ஊடாக அதனை விருத்திசெய்து கொள்ளக் கூடிய பல சந்தர்ப்பங்களை கொவிட்-19 காலப்பகுதி உருவாக்கியுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்கள் என்ற வகையில் ஒவ்வொரு மாணவரும் ஆங்கில அறிவின்பால் கரிசனை காட்ட வேண்டிய தேவை காணப்படுகின்றது. அதனைக் குறிப்பிட்ட ஒரு பாடத்திட்டத்தோடு மாத்திரம் வரையறை செய்திட முடியாது. ஆங்கில மொழியை சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு கற்றுக்கொள்ள கிடைத்த சிறந்த ஒரு சந்தர்ப்பமாக திகழ்வது நிகழ்நிலைக் கற்கை ஆகும். பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிகழ்நிலையினூடாக பல வெபினர்களில் (Webinars) கலந்து கொள்ள முடியுமானதாக இருந்தது. அதன்மூலம் அவர்களின் ஆங்கிலமொழி அறிவு எந்தளவில் விருத்தி செய்துகொள்ள முடியுமானதாக இருந்தது என்பது பற்றியே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Covid-19 பரவல் காரணமாக இன்று அனைத்து நடவடிக்கைகளும் ஒன்லைன் மூலமே நடைபெற்று வருகின்றன. பாலர் வகுப்பு பாலர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அனைவரும் நிகழ்நிலையிலே கற்கின்றனர். இன்று மாணவர்கள் நிகழ்நிலையில் கல்வியைத் தொடர ஆரம்பித்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடைகின்ற நிலையில் உள்ளது. நிகழ்நிலையில் கல்வி கற்பதில் உள்ள சவால்களையும், பிரச்சினைகளையும் பல ஆய்வுகள் அடையாளப்படுத்தி உள்ளன. ஆனால் அத்தனை சவால்களையும் தாண்டி பரீட்சைகள், கற்கைநெறிகள், வகுப்புகள் அனைத்தும் நிகழ்நிலையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

அதிலும் குறிப்பாக ஆங்கில மொழியை விருத்தி செய்வதற்காக Spoken English, இலகு முறையில் ஆங்கிலம் கற்கலாம், வீட்டில் இருந்தவாறே ஆறு மாதங்களில் ஆங்கிலம் கதைக்கலாம் என்று பல தலைப்புகளில் webinar sessions, classes நடைபெற்றுக் கொண்டிருப்பதை அறிய முடியும். இந்நிலையில் மாணவர்களால் Online Webinars மூலம் தங்களுடைய ஆங்கில அறிவை விருத்தி செய்துகொள்ள முடியுமாக இருந்ததா என்பதை ஆய்வுப்பிரச்சினையாக கொண்டு இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ஆய்வு நோக்கம்

உயர் கல்வியைத் தொடர்கின்ற பல்கலைக்கழக மாணவர்கள் Online Webinars மூலம் தங்களுடைய ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்துகொள்ள முடியுமாக இருந்ததா என்பதைக் கண்டறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளைப் பயன்படுத்தி அளவுசார் "ஆய்வு முறைகளை அடிப்படையாகக் கொண்டு விபரிப்பு முறையியலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தின் அறபு மொழித் துறையில் கற்கும் 3ஆம் வருட மாணவர்களில் 75 மாணவர்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு வினாக் கொத்துக்கள் வழங்கப்படுவதன் மூலம் முதலாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டன. ஆய்வுகள், இணையக்கட்டுரைகள், இணையத்தளம், நூல்கள் போன்றவற்றின் மூலம் இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன. கிடைக்கப்பெற்ற தரவுகள் அனைத்தும் ஒழுங்கமைக்கப்பட்டு எம்.எஸ். எக்ஸல் மூலம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

## இலக்கிய மீளாய்வு

Covid- 19 காலப்பகுதியில் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் தொடர்பாக பல ஆய்வுகள் காணப்படுகின்றன. அவை நிகழ்நிலை கற்றல், நிகழ்நிலை வகுப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

1. Aleeshan .P.M.A, Hasana B 2021 "covid 19 காலப்பகுதியில் நிகழ்நிலை மூலமாக கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கிய சவால்கள், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீட முதலாம் வருட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு" என்ற ஆய்வில் நிகழ்நிலை மூலம் கற்கும் போது மாணவர்கள் எதிர் நோக்கிய சவால்கள், அதற்கான தீர்வுகள், மாணவர்களின் குடும்பப் பின்புலம் போன்றவற்றைத் தெளிவுபடுத்துவதாக காணப்படுகின்றது.
2. Jesuniya. DC, Priyadarashani H.D. (2020) "Impact on online teaching learning process during covid:19 with reference to faculty of education> the open University of Sri Lanka" என்ற ஆய்வில் நிகழ்நிலையில் மூலம் கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளும் போது ஏற்படுகின்ற தாக்கம் பற்றி விவரிக்கிறது.

3. Nafrees. A.C.M, Rohan A.M.F, (2020)" Awareness of online learning of undergraduates during covid:19 இவ்வாய்வானது இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களிடம் நிகழ்நிலைக் கற்றலில் உள்ள தெளிவு, நிகழ்நிலைக் கற்றல் பற்றிய அறிவு, நிகழ்நிலையில் கற்கும் போது வருகின்ற சிறிய சிக்கல்களைக் கையாளும் விதம் போன்றவற்றை அடையாளப்படுத்தியுள்ளது.
4. பாதிமா. எம்.என், அகீலா. எச் (2021) "மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்பதில் எதிர் நோக்கும் சவால்கள் ஹிஜ்ராபுர முஸ்லிம் மகா வித்தியாலயம் க.பொ.த சாதாரண தர மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு" இக்கட்டுரை ஆங்கில மொழி பற்றியும், ஆங்கில மொழியைக் கற்பதில் உள்ள சவால்கள் பற்றியும் ஆராய்கிறது.
5. Nafees. A.C.M, Roshan A.M.F (2020) "An Investigation of srilankan university Undergraduates perception about online Learning during Covid : 19" என்ற ஆய்வில் இளங்கலை பட்டதாரிகளிடம் online கற்றல் பற்றியும், அவர்களின் கருத்துக்கணிப்பு பற்றியும் ஆய்வில் ஆராயப்பட்டுள்ளது.
6. Mohalika, Ramakanda, (2020) "Effectiveness of webinars and online workshops during the covid 19 pandemic இவ் ஆய்வானது நிகழ்நிலை மூலமாக நடைபெறுகின்ற webinars மற்றும் online workshops எவ்வாறு காணப்பட்டது என்பதையே ஆராய்கிறது.


Covid 19 காலப்பகுதியில் இவ்வாறான பல தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதலான ஆய்வுகள் நிகழ்நிலை மூலமாக கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் உள்ள தாக்கம், சவால்கள் அது பற்றிய கருத்துக்கணிப்பு போன்றவற்றையே ஆராய்ந்துள்ளன. மாணவர்கள் வீட்டில் இருந்தவாறே பல செயலமர்வுகளில் கலந்து கொண்டுள்ளனர். அதுவும் ஆங்கில மொழி தொடர்பான செயலமர்வில் கலந்து கொண்டுள்ளனர், என்பதை எமது ஆய்வில் காணலாம். ஆனால் online webinar மூலம் ஆங்கில மொழியை விருத்தி செய்வது தொடர்பாக எமது தேடலுக்கு உட்பட்ட வகையில் எந்த ஆய்வும் இதுவரை செய்யப்படவில்லை. ஆகவே இந்த ஆய்வானது இவ்விடைவெளியை நிரப்பும் வகையில் அமைந்துள்ளது.

## பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

உலகிற்கு COVID-19 என்ற வார்த்தை அறிமுகமாகி இன்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்ற நிலையில் உள்ளது. ஒவ்வொரு நாளும் தினசரி பத்திரிகைகளில் முதல் தலைப்பு செய்தியாக கொரோனா என்ற சொல்லை காண்பது வழக்கமாகி விட்டது. தொழிநுட்ப அறிவும் அதற்கான வசதி வாய்ப்புக்கள் இருந்தவர்கள் மட்டுமே Online இல் கற்றுக் கொண்டிருந்த காலத்தில், ஒரு வைரஸ் COVID-19 என்ற பெயரில் அறிமுகமாகி முழு உலகையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்து முழு உலக மாணவர்களுக்கும் Online Studies ஐ பழக்கப்படுத்தியுள்ளது. பணக்கார மாணவர்கள், ஏழை மாணவர்கள் என்ற எவ்வித வேறுபாடுகளுமின்றி நிகழ்நிலையில் கல்வியைத் தொடர்வது இன்று சாதாரண விடயமாக மாறியுள்ளது. அதிலும் குறிப்பாக உயர்கல்வியைத் தொடர்கின்ற மாணவர்கள் தங்களுடைய பல்கலைக்கழக கற்கையை தொடர்ந்து கொண்டே வேறு துறை சார்ந்த கற்கைகளைத் தொடர்கின்றனர். அந்த வகையில் கோவிட்-19 காலப்பகுதியில் Online Webinars மூலம் தங்களுடைய ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்து கொள்ள முடியுமாக இருந்ததா என்பதை கண்டறிய ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களிடம் பின்வரும் வினாக்கள் தொடுக்கப்பட்டன.


வினாக்கொத்தில் பல வினாக்கள் தொடுத்ததன் மூலமாக கொரோனா

பரவலினால் தாக்கங்களும், பாதகங்களும் இருக்கின்றதைப் போன்று சாதகங்களும் இருப்பதை அறிய முடிகிறது. அந்த வகையில் கொரோனாவினால் பல பாதகங்கள் ஏற்பட்டதைப் போன்று சாதகங்களும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதற்கு உடன்படுகின்றீர்களா? என வினவப்பட்ட போது 31% மானோர் ஓரளவு உடன்படுகிறேன் என்றும் 34% மானோர் உடன்படுகிறேன் என்றும் 29% மானோர் முழுமையாக உடன்படுகிறேன் என்றும் 5% மானோர் உடன்படவில்லை என்றும் பதிலளித்தார்கள். இதனடிப்படையில் அதிகமான மாணவர்களுக்கு கொரோனா தாக்கம் சாதகமான விடயங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது என்பதை அவதானிக்க முடிகிறது. இதனை வரைபடம் 01 குறித்துக் காட்டுகிறது.




**வரைபடம் 01: கொரோனா மூலமான பாதகங்களும் சாதகங்களும்**


குறிப்பாக கல்வித்துறைக்கே பல சாதகங்கள் காணப்படுகின்றன. குறைந்த செலவில் களைப்பில்லாமல் பரவலான அறிவைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இது பற்றி மாணவர்களிடம், கொரோனா தொற்றினால் கற்றல் முறைமை மாற்றமடைந்து Online மூலமான கற்றல் ஒரு புதிய அனுபவமாகவும் பரவலான அறிவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது என்பதற்கு உடன்படுகின்றீர்களா? என்று தொடுக்கப்பட்ட வினாவிற்கு 26% மானோர் முழுமையான உடன்படுகிறோம் என்றும் 32% மானோர் உடன்படுகிறோம் என்றும் 32% மானோர் ஓரளவு உடன்படுகிறோம் என்றும் 7% மானோர் முழுமையாக உடன்படவில்லை என்றும் கூறியிருக்கின்றனர். இதனடிப்படையில், அதிகமான மாணவர்கள் கொரோனா பரவல் காலப்பகுதியில் கற்றல் துறையில் அதிகமான சாதகங்கள் இருப்பதற்கு உடன்படுகிறார்கள். இதனை வரைபடம் 02 விபரிக்கின்றது.





**வரைபடம் 02: Online மூலமான கற்றல் ஒரு புதிய அனுபவம், பரவலான அறிவைப் பெறல்**

Online-19 பரவல் காலப்பகுதியில் பல துறை சார்ந்த Webinars பல அமைப்புகளாலும் நடத்தப்பட்டுக் கொண்டிருப்பதை அறிய முடிகிறது. அந்தவகையில் இவ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட மாணவர்களிடம் பல Webinars களில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்ததா? என்று கேட்கப்பட்ட வினாவிற்கு 55% மானோர் ஓரளவு பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது என்றும் 31% மானோர் நிறைய Webinars களில் பங்குபற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது என்றும் அதில், சுமார் எத்தனை Webinarsகளில் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தது என்ற வினாவிற்கு, அதிகமானவர்கள் 5 அல்லது 5ஐ விட அதிகமான Webinars களுக்குப் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைத்தது என்றும் குறிப்பிட்டனர். ஒவ்வொரு Webinarsகளும் எத்தனை மணித்தியாலங்கள் என்று வினவப்பட்ட வினாவிற்கு, 48% மானோர் இரண்டு மணித்தியாலங்கள் கொண்ட Webinars என்றும் 25.3% மானோர் 1 மணித்தியால Webinars என்றும் 17.3% மானோர் 3-5 மணித்தியாலங்கள் கொண்ட Webinars என்றும்

8% மானோர் 10 - 20 மணித்தியாலங்களை கொண்ட Webinars என்றும் பதிலளித்தார்கள். இவற்றை முறையே வரைபடம் 03, 04, 05 விவரிக்கின்றன.





**வரைபடம் 04: பங்கு பற்றிய Webinars**





**வரைபடம் 05 Webinars களின் கால அளவு**

மாணவர்கள் எவ்வகையான Webinars sessions களில் பங்கு பற்றினீர்கள் என்ற வினாவிற்கு, Career guidance, Language and skill development, இலக்கியம், பொது அறிவு ரீதியானது, மொழியியல் ரீதியானது போன்ற Webinarsகளில் பங்கு பற்றியதாகக் குறிப்பிட்டனர். என்னென்ன நோக்கத்திற்காக பங்கு பற்றினீர்கள் என்று தொடுக்கப்பட்ட வினாவிற்கு 63% மாணோர் அறிவை விருத்தி செய்வதற்கு என்றும் 26% மாணோர் Interestகாக என்றும் 8% மாணோர் Entertainment என்றும் பதிலளித்தார்கள். இதனை வரைபடம் 06 விளக்குகிறது.




**வரைபடம் 06: Webinars Sessions ல் பங்குபற்றிய நோக்கங்கள்**


இவ் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கொரோனா பரவல் காலப்பகுதியில் தங்களது அறிவை விருத்தி செய்துகொள்வதற்காக பல Webinarssessions களில் பங்கு பற்றியிருப்பதை அறிய முடிகிறது. அந்தவகையில் ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்து கொள்ள Webinars Sessionsகளில் பங்கு பற்றினீர்களா என்ற வினாவிற்கு 68% மாணோர் தங்களுடைய ஆங்கில அறிவை மேம்படுத்திக்கொள்ள Webinars sessions களில் பங்குபற்றினர் என்றும் 32% மாணோர் பங்குபற்றவில்லை என்றும் கூறியிருந்தனர். இதனடிப்படையில் நோக்கினால் பெரும்பாலான மாணவர்கள் காலப்பகுதியில் தங்களுடைய ஆங்கில அறிவை விருத்தி செய்துகொள்ளமுயற்சிசெய்திருக்கிறார்கள் என்பதை அவதானிக்க முடியும். இதனை வரைபடம் 7 தெளிவுபடுத்துகிறது.




**வரைபடம் 07: ஆங்கில மொழி அறிவை விருத்திசெய்வதற்கான Webinars**


ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்து கொள்வதில் அம்மாணவர்களின் தேடலும் ஆர்வமும் எவ்வாறு இருந்தது என்பதைக் கண்டறிய, ஆங்கில மொழி அறிவை வளர்த்துக் கொள்வதற்காக அது தொடர்பான Webinarsகளை மற்றவர்களிடம் கேட்டும் தேடியும் அதற்கு கலந்துகொள்ள ஆர்வமாக இருந்தேன் அல்லது இருக்கிறேன் என்ற வினாவிற்கு, 28% மாணோர் முழுமையாக உடன்படுகிறோம் என்றும் 36% மாணோர் உடன்படுகிறோம் என்றும் 31% ஓரளவு

உடன்படுகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளனர். எமது ஆய்வுக்கு உட்பட்ட அதிகமான மாணவர்கள் ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்து கொள்ள ஆர்வமாக இருந்துள்ளதை எம்மால் அறிய முடிகிறது. இதனை வரைபடம் 8 தெளிவுபடுத்துகிறது.





**படம் 08: ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்து கொள்வதில் ஆர்வம்**

ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்வதற்காக பங்கு பற்றி Webinars sessions மூலம் உங்களுடைய ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்து கொள்ள முடியுமாக இருந்ததா என்ற வினாவிற்கு *47%* மானோர் விருத்தி செய்து கொள்ள முடியுமாக இருந்தது என்றும் *41%* மானோர் ஓரளவு விருத்தி செய்து கொள்ள முடியுமாக இருந்தது என்றும் *12%* மானோர் விருத்தி செய்து கொள்ள முடியவில்லை என்றும் குறிப்பிட்டனர். அந்தவகையில் அதிகமான மாணவர்களுக்கு ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்வதற்காக பங்கு பற்றிய Webinars sessionsகளில் ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்துகொள்ள முடியுமாக இருந்திருக்கின்றது என்பதை அறிய முடியுமாக உள்ளது. வரைபடம் *09* இதனை விபரிக்கின்றது.




**வரைபடம் 09 ஆங்கில மொழி அறிவை விருத்தி செய்ய முடிதல்**

நேரடியாக ஒரு ஆங்கில மொழிக் கற்கையை தொடர்வதற்கும், நிகழ்நிலையில் ஒரு ஆங்கிலக் கற்கையைத் தொடர்வதற்கும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நேரடியாகத் தொடரும்போது போக்குவரத்துச் செலவு, உணவுச் செலவு, கற்கை நெறிக்கான பணம், நேரம் இவ்வாறான செலவுகளுடனே கற்கை நெறியைத் தொடர வேண்டும். ஆனால் நிகழ்நிலையில் கற்கை நெறியைத் தொடரும் போது கற்கை நெறிக்கான பணம் செலவாக இருக்கும் மற்றும் விரும்பிய நாட்டில் விரும்பிய நிறுவனத்தில் தரம் வாய்ந்த வளவாளர்கள் மூலம் கற்கையைத் தொடர முடியும், தீர்க்கமுடியாத coverage பிரச்சினையைத் தீர்ப்பதற்காக Webinars முடிந்தபின் அதன் வகுப்புப் பதிவுகளை பெற்றுக்கொள்ள முடியும். இவ்வாறான சலுகைகளை COVID-19 வைரஸ் ஏற்படுத்தியுள்ளது. COVID-19 வைரஸ் ஏற்படுத்திய சலுகை காரணமாக மாணவர்கள் உள்நாட்டு ரீதியாக English Courses செய்தீர்களா அல்லது வெளிநாட்டு ரீதியாக English Courses செய்தீர்களா என்ற வினாவிற்கு, *99%* மானோர் உள்நாட்டு ரீதியாகவும், *1%* மானோர் வெளிநாட்டு ரீதியாகவும் ஆங்கில மொழிக் கற்கைகளைத் தொடர்ந்திருக்கிறார்கள் என்பதை வரைபடம் *10* விளங்கப்படுத்துகின்றது.




**வரைபடம் 10 கற்கை நெறியை தொடரல்**

கொரோனா பரவல் காரணமாக பல சவால்கள் காணப்பட்டாலும் அவற்றையும் தாண்டி எம் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோருக்குத் தங்களுடைய ஆங்கில அறிவை விருத்தி செய்துகொள்ள முடியுமாக இருந்திருப்பதை இவ்வாய்வின் மூலம் கண்டறியலாம்.

### முடிவுரை

கொவிட்-19 காலப்பகுதியிலிருந்து இன்று வரை மனிதர்களின் அன்றாட செயல்களில் சில மாற்றுவழிகள் கைக்கொள்ளப்படுகின்றன. அதனடிப்படையிலேயே மாணவர்களுக்கான நிகழ்நிலைக்கல்வியும் காணப்படுகிறது. அதனை வினைத்திறனாகப் பயன்படுத்துவதால் உச்சபயனையும் அடையமுடிகிறது. பல்கலைக்கழக மாணவர்கள் நிகழ்நிலையினூடே, தமது ஆங்கில மொழி அறிவை விருத்திசெய்து கொள்வதற்காக பல செயலமர்வுகளிலும் கற்கைநெறிகளிலும் கலந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாய்வு வினாக்களின் அடிப்படையில் பெரும்பாலனவர்கள் தமது வீடுகளிலிருந்தே நிகழ்நிலையினூடாக ஆங்கில மொழியை கற்று கொண்டிருக்கிறார்கள் என்பதை இவ்வாய்வில் இனங்காண முடிகிறது. அதுமட்டுமின்றி இலத்திரனியல் சான்றிதழ் வழங்கப்படும் செயலமர்வுகளை விட தாமாக சிறு கட்டணத்தைச் செலுத்தி தமது அறிவை விருத்தி செய்துகொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் வினைத் திறனான முறையில் பல செயலமர்வுகளில் மாணவர்கள் கலந்துகொண்டிருப்பதையும் இவ்ஆய்வின் மூலம் கண்டறிய முடிகின்றது. ஆங்கில மொழியை மாத்திரம் கற்பிக்கும் செயலமர்வுகளில் மட்டுமின்றி ஆங்கில மொழி மூலமாக நடாத்தப்படும் வேறு பல செயலமர்வுகளிலும் கலந்து கொண்டு தமது English இனை விருத்திசெய்து கொண்டிருக்கிறார்கள்.

நேரடியான கல்வியினின்று நிகழ்நிலையினூடே தமக்கு மேலதிகமான பல கற்கைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியுமாக இருப்பதையும், கொவிட்-19 காலப்பகுதியில் தமக்கு கல்வித் துறையில் பல சாதகங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதையும் இவ்வாய்வு கண்டறிந்துள்ளது.

### உசாத்துணைகள்

1. அஷ்ரப். எ.எம்.எப். 2012. *விரிவுரை மொழி ஒரு திறந்த உரையாடல்.* கலம், 5.
2. சந்திரசேகரம், சோ., கருணாநிதி, மா. 2006. *மீண்டும் பயிற்று மொழியாக ஆங்கிலம்.* அகவிழி வெளியீடு.
3. சின்னதம்பி, எம். 2010. *இலங்கையில் ஆங்கிலக்கல்வி - கற்றலும் கற்பித்தலும்.* கல்வி - முகாமை திட்டமிடல் ஆய்விதழ்.
4. பாதிமா, எம்.என்., அகீலா, எச்., அலீஸான், பீ.எம்.ஏ. 2021. *மாணவர்கள் ஆங்கில மொழியைக் கற்பதில் எதிர் நோக்கும் சவால்கள் தெல்ஃ ஹிஜ்ராபுர முஸ்லிம் மகாவித்தியாலய க.பொ.த.சாதாரண தர மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு.* எட்டாவது சர்வதேச ஆய்வரங்கு, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
5. ருகையா, எம்..ஜெ.எப்., சஹானா, எம்.எம்.எப்., அஸ்கியா, எம்.ஏ.ஆர். ஸப்ரா, எம்.எஸ்.எப்., நஸ்மியா, ஏ.எச்., ராசிக், அஹமட் சர்ஜூன். 2017. *பல்கலைக்கழக மாணவியரின் மும்மொழிப் புலமை பற்றிய மதிப்பீடு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை மையப்படுத்திய ஆய்வு.* ஏழாவது சர்வதேச ஆய்வரங்கு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
6. Aleeshan, P.M.A.; Hasana, B.; Zunoomy, M.S. (2021). *COVID-19 காலப்பகுதியில் நிகழ்நிலை மூலமான கற்றல் செயற்பாடுகளினால் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்நோக்கிய சவால்கள்: இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட முதலாம் வருட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு.* 8th International Symposium of the Faculty of Islamic Studies and Arabic Language, outh Eastern University of Sri Lanka.

7. Risla Banu, M. H., Rimaza, R. M .F., Zeeras Banu, M. H., Ashfa, M. A. F., Ijas Mohamed, A. (2021). Covid-*19 என்ற தொற்றுநோய்க் காலப்பகுதியில் நிகழ்நிலைக்கல்வி மூலமான கற்பித்தல் நடவடிக்கைகளும் மாணவர்கள் எதிர்நோக்கிய சவால்களும்: தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிப்பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு,* 9th South Eastern University International Arts Research Symposium. SEUIARS 2020.